C.C.No. 05 /2023
நாள்: 10.02.2025
நேரம்: 11.50

P.W– 1: குமரவேல், த/பெ. கிழவன்

2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. அவரது தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாண வாக்குமூலம் செய்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

எனக்கு 62 வயதாகிறது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5ம் வகுப்பு படித்துள்ளேன். தமிழில் சரளமாக எழுத தெரியுமா என்றால் தெரியும். ஆங்கில மொழியில் என்னால் எழுத முடியுமா என்றால் முடியாது. இந்த வழக்கு புகாரை நான் கைப்பட எழுதினேன் என்று சொன்னால் சரியல்ல, நான் கைப்பட எழுதவில்லை. இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்காக இன்றைய தினம் எனக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதா என்றால் அனுப்பப்பட்டது. அந்த அழைப்பாணையில் நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அழைப்பாணையில் உள்ள எனது கையொப்பமும், புகார்மனுவில் உள்ள எனது கையொப்பமும் ஒன்று தான் என்றால் சரிதான். எங்கள் ஊரில் மேற்கு திசையில் கடைசியாக எனது வீடு தான் உள்ளது என்றால் சரிதான், எனது வீட்டை தாண்டி தான் ஊரில் உள்ளவர்கள் கண்மாய்க்கு குளிக்க செல்வார்கள் என்று சொன்னால் சரிதான். எனக்கு 2 பிள்ளைகள். எனது 2 பிள்ளைகளும் சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் அன்று வெளியூரில் இருந்தார்கள் என்று சொன்னால் சரிதான்.

வழக்கமாக காலையில் நான் என்ன வேலை செய்வேன் என்றால் காலையில் 6.00 மணிக்கு நடைபயிற்சிக்கு செல்வேன். நடைபயிற்சி முடிந்து, எத்தனை மணிக்கு வருவேன் என்றால் காலை 7.30 மணிக்கு வருவேன். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் அன்று நான் நடைபயிற்சிக்கு சென்றேனா என்றால் சென்றேன். அ.சா.3 எனக்கு தம்பி முறை என்று சொன்னால் சரியல்ல, மகன் முறை, எனது பங்காளி அண்ணன் மகன். சாட்சி காளியம்மாள் எனது மகனின் மனைவியின் சகோதரி என்று சொன்னால் எனது மகன் மனைவியின் பெரியம்மா மகள். சாட்சி செல்வராஜ் எனது மனைவியின் உடன்பிறந்த சகோதரியின் கணவர் என்று சொன்னால் சரிதான். நான் எங்கள் கிராமத்தின் முன்னாள் தலைவர் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் சாட்சி திருமுருகன் என்னுடன் பணிபுரிந்த முன்னாள் கவுன்சிலர் என்று சொன்னால் சரியல்ல, தற்போது கவுன்சிலராக இருக்கிறார்.

எனக்கு இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். சம்பவமானது காலை 8.00 மணியளவில் நடைபெற்றதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல, 8.00 – 8.30 மணியளவில் நடைபெற்றது. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் போது நானும், எனது மனைவியும் எங்கள் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தோம் என்று சொன்னால் சரியல்ல, நான் வீட்டிற்குள் இருந்தேன், எனது மனைவி சமையலறையில் சமையல் செய்து கொண்டிருந்தார். அந்த சமயத்தில் எங்கள் வீட்டில் வேறு யாரும் இல்லை என்றாலும், நானும், எனது மனைவியும் மட்டும் தான் இருந்தோம் என்று சொன்னால் சரிதான். 1, 2 எதிரிகள் கண்மாயில் குளிப்பதற்காக எதில் வந்தார்கள் என்றால் ஒரே இருசக்கர வாகனத்தில் சேர்ந்து வந்தார்கள். அவர்கள் வந்ததாக சொல்லப்படும் இருசக்கர வாகனத்தின் எண், வாகனத்தின் நிறம் மற்றும் மாடல் தெரியுமா என்றால் தெரியாது. எனது மனைவி ஊரில் உள்ளவர்களை சமாளிக்கும் அளவிற்கு அறிவும், திறமையும், தைரியமும் படைத்தவர் என்று சொன்னால் சரியல்ல, சாதாரண பெண். 2ம் எதிரி எனது மனைவியின் உறவினர் என்று சொன்னால் சரியல்ல, எனது உறவினர். எனது மனைவி தான் குளிக்க சென்ற எதிரிகளை வழிமறித்து தவறான வார்த்தைகளால் பேசினார் என்று சொன்னால் சரியல்ல. என்னை, எதிரிகள் தாக்கவில்லை என்றாலும், நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிகள் என்னை எந்த இடத்தில், எந்த விதத்தில், தாக்கினார்கள், எந்த திசையில் இருந்து தாக்கினார்கள், எனக்கு எங்கெல்லாம் காயம் ஏற்பட்டது என்றால் நான் வீட்டிற்கு முன்பு நின்று கொண்டிருந்தேன், வீட்டு வாசலில் சாலை ஓரத்தில் இருசக்கர வாகனத்தை நிறுத்தி கொண்டு, எதிரிகள் என்னை தாக்கினார்கள். என்னை, எதிரிகள் தாக்கவில்லை என்றாலும், அவ்வாறு தாக்கியிருந்தால் காயங்கள் ஏற்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல, தாக்கினார்கள், நெஞ்சை பிடித்து தள்ளிவிட்டார்கள், காயம் எதுவும் ஏற்படவில்லை. எந்த பக்க நெஞ்சை பிடித்து தள்ளிவிட்டார்கள் என்றால், இடது பக்கம். நான் இருதய நோயாளி என்ற நிலையில் என்னை எதிரிகள் நெஞ்சை பிடித்து தள்ளியிருந்தால் நான் உடனடியாக மருத்துவமனைக்கு சென்றிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

(**நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது**.)

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2025.02.10 14:52:40 +0530